Enclosure - 3

Format for Capital Projects and Budget Execution Report - PI - 2 (5)

ULB Name : Salem Corporation ( FY 2024-25)

(Rs. In Crore)

| Sl.No. | Account / Title of Projects | Budjet Estimates / Allotment | Revised Estimates / Allotment | Actual Expenditure / Execution |
|---|---|---|---|---|
| 1 | TURIP 2024-25 (Road) | 23.49 | 23.49 | 11.47 |
| 2 | NSMT (Road) | 8.21 | 8.21 | 4.88 |
| 3 | General Fund (Building) | 17.20 | 17.20 | New Proposal |
| 4 | General Fund (Building) | 60.00 | 60.00 | New Proposal |
| 5 | General Fund (Building) | 6.00 | 6.00 | New Proposal |
| 6 | General Fund (Building) | 4.83 | 4.83 | New Proposal |

COMMISSIONER,
SALEM CITY MUNICIPAL CORPORATION

16/4/25

PI2(5)

**2024– 25 ஆம் ஆண்டிற்க்கான சாலைப் பணிகளுக்கு கீழ்க்கண்டுள்ள விவரப்படி விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டது, தற்போது நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கையில் உள்ளது.**

**TURIP - பழுதடைந்த சாலைகள்**

சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.23.49 கோடிக்கு 55.563 கி.மீ நீளத்திற்கு 384 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**NSMT – நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (பழுதடைந்த சாலை)**

சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.8.21 கோடிக்கு 26.717 கி.மீ நீளத்திற்கு 176 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**புதிய மண்டல அலுவலகம் கட்டுதல்**

சேலம் மாநகராட்சி வார்டு அலுவலகங்களில் அந்தந்த கோட்டங்களுக்கு உண்டான பணிகள் உதவி ஆணையாளர் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு அலுவலகங்களில் பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, வரி வசூல் பிரிவு, பொதுப் பிரிவு, சுகாதார பிரிவு, நில அளவை பிரிவு, தணிக்கை பிரிவு மற்றும் பதிவேடு இருப்பு அறை ஆகிய பிரிவுகளுக்கு போதிய இட வசதி இல்லாமல் மிகுந்த சிரமத்துடன் இயங்கி வருகின்றன. மேலும் அலுவலர்கள், வார்டு அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் ஆகியோர்களின் வாகனங்களை நிறுத்த இடவசதியே இல்லை. எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய 3 வார்டு அலுவலகம் கட்டுவதற்கு கீழ்கண்டுள்ள விவரப்படி ரூ.17.20 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு கிடைக்க பெற்றவுடன் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ரூ.கோடியில்)

| வ.எண். | வார்டு அலுவலகம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சூரமங்கலம் வார்டு அலுவலகம் | 5.00 |
| 2. | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் | 5.00 |
| 3. | அம்மாபேட்டை வார்டு அலுவலகம் | 7.20 |
| | மொத்தம் | 17.20 |

**சந்தைப்பேட்டை வணிக வளாகம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.28ல் அமைந்துள்ள சந்தைப்பேட்டை பகுதியானது, சேலம் மாநகரில் உள்ள வணிக பொருட்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்திட ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

செவ்வாய்பேட்டை சந்தைப்பேட்டை பகுதியில் ஏற்கனவே 1990ஆம் ஆண்டு சேலம் நகராட்சியாக இருந்த போது அப்பகுதியில் வணிக பயன்பாட்டிற்காகவும் மற்றும் வருவாய் அதிகப்படுத்தும் நோக்கத்தை கருத்தில் கொண்டு 30க்கும் மேற்பட்ட கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் அக்கடைகள் கட்டி முடிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் பல கடைககள் உறுதித் தன்மையை இழந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி சந்தைபேட்டை வணிக வளாகம் ஆனது சுமார் 1,00,000 சதுர.அடி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மேலும் பழுதடைந்த கடைகளை இடித்து அப்புறபடுத்திவிட்டு புதியதாக வணிக வளாகம் கட்ட சுமார் ரூ.60.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படியான நவீன வணிக வளாகம் மூலம் சேலம் மாநகராட்சிக்கு அதிக வருவாய் மற்றும் நிதி நிலையினை மேம்படுத்த வாய்ப்பு உள்ளது.

**சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20 வணிக வளாகம் கட்டுதல்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20க்கு உட்பட்ட சூரமங்கலம் மெயின் ரோடில் உள்ள சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை வணிக வளாகமானது தீ விபத்து ஏற்பட்டு சேதமடைந்தது. கட்டிடங்கள் மிகவும் பலவீனம் அடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதால், மன்றத்தின் அனுமதி பெற்று தற்போது பாதுகாப்பான முறையில் சேதமடைந்த வணிகவளாகத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காகவும் மற்றும் சேலம் மாநகராட்சியின் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய வேண்டியும் சேதமடைந்து உள்ள வணிக வளாகத்தினை இடித்துவிட்டு, அப்புறப்படுத்தியபின் அதே இடத்தில் புதிய பொழிவுடனும், நவீன வசதிகளுடனும், பொதுமக்களின் அன்றாட தேவைக்காகவும் சேலம் மாநகராட்சியின் வருவாய் பெருக்க வேண்டியும் புதிய நவீன வணிக வளாகத்தினை கட்டி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட ஏதுவாக சுமார் ரூ.6.00 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**புதிய பேருந்து நிலையம் மேம்படுத்துதல்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் புதிய பேருந்து நிலையமானது 1988–ம் ஆண்டு கட்டப்பட்டு இன்று வரை சுமார் 35 ஆண்டுகாலமாக தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து போக்குவரத்தினை அளித்து வருகிறது.

புதிய பேருந்து நிலையமானது சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் 4 நடைமேடைகளுடன் கூடிய 80 நிறுத்தங்களை கொண்ட "A" வகை பேருந்து நிலையமாகும்.

புதிய பேருந்து நிலையத்திலிருந்து நாளொன்றிற்கு சுமார் 1555 பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் 3000 நடைகளுக்கு மேலாக இயங்கி வருகின்றன. சுமார் 2 லட்சம் பொதுமக்கள் இந்த பேருந்து நிலையத்திற்கு அன்றாடம் பல்வேறு தேவைகளுக்காக வந்து செல்கின்றனர்.

பயணிகளின் வசதிக்காக ஏற்கனவே 5 இடங்களில் பொது கழிப்பிடம் 94 இருக்கைகளுடனும் தனியாக 40 எண்ணிக்கையிலான சிறுநீர் கழிக்கும் இடம் உள்ளிட்ட சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு சுமார் 35 ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளன. நாளுக்கு நாள் பயணிகளின் வருகையும் பேருந்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்வதன் காரணமாக, ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தற்போதைய சூழலுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் மேலும் பல்வேறு வசதிகள் கூடுதலாகவும், பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் தற்சமயம் கீழ்கண்ட அடிப்படை வசதிகள் மிகவும் அவசியமானதாக உள்ளன.

| | |
|---|---|
| 1 | கூடுதல் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம். |
| 2 | பேருந்து நிலையத்தின் அனைத்துப்பகுதிகளிலும் சேதமடைந்த மற்றும் பாதுகாப்பில்லாத மின் வயர்கள் , மின்விசிறி மற்றும் மின்விளக்கு உள்ளிட்ட மின்சாதனங்களை மாற்றி அமைத்தல். |
| 3 | 4 நடைமேடையிலும் சேதமடைந்த டைல்ஸ் மற்றும் தரையினை பராமரித்தல். |
| 4 | கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்துதல். |
| 5 | ஏற்கனவே பயணிகள் அமரும் பகுதிகளில் பழுதடைந்த இருக்கைகளை மாற்றியும், கூடுதல் இருக்கை வசதிகளை ஏற்படுத்தியும் தருதல். |
| 6 | பழுதடைந்த மழைநீர் சேகரிக்கும் குழாயினை சீரமைத்தல். |
| 7 | 35 ஆண்டுகள் பழைமையான 4 நடைமேடைகளின் கூரையினை பராமரித்தல். |
| 8 | தாய்மார்களுக்கான பாலூட்டும் அறை |
| 9 | பயணிகளின் பொருட்கள் வைப்பறை புதிப்பித்தல். |
| 10 | புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடைகளினை சீரமைத்தல். |
| 11 | பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் மற்றும் நான்கு நடை மேடைகளுக்கும் வர்ணம் பூசுதல். |
| 12 | மழைநீர் வடிகால் சீரமைத்தல். |
| 13 | உயர் மின் கோபுர விளக்கு. |
| 14 | தகவல் பலகை, தொலைக்காட்சி வசதி , PAS வசதி , CCTV Camera மற்றும் கட்டுப்பாட்டு அறை அமைத்தல் உள்ளிட்ட பணிகள். |

| வ. எண் | மேற்கொள்ள வேண்டிய பணிகள் | எண்ணிக்கை | உத்தேச மதிப்பீடு ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கூடுதல் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம். | 2 (பொது கழிப்பிடம்) +2 (60 இருக்கைகள் கொண்ட பிரத்தியேக சிறுநீர் கழிப்பிடம் ) | 120.00 |
| 2 | ஏற்கனவே உள்ள கழிப்பிடங்களில் பராமரிக்கும் பணி | 94 இருக்கைகள், டைல்ஸ் , கதவு மற்றும் வர்ணம் பூசுதல் | 40.00 |
| 3 | பேருந்து நிலையத்தின் அனைத்துப்பகுதிகளிலும் சேதமடைந்த மற்றும் பாதுகாப்பில்லாத மின் வயர்கள் , மின்விசிறி மற்றும் மின்விளக்கு உள்ளிட்ட மின்சாதனங்கள் மாற்றி அமைத்தல் | 56 கடைகள் மற்றும் பயணிகள் இருக்கை பகுதிகள் அமைக்க 100 மின்விசிறிகள், புதிய LED மின்விளக்குகள் மற்றும் புதிய மின் வயர்கள் அமைத்து சீரமைக்கும் பணிகள் | 30.00 |
| 4 | நடைமேடையிலும் சேதமடைந்த டைல்ஸ் மற்றும் தரையினை பராமரித்தல் | டைல்ஸ் மற்றும் Anti Skid Tiles | 15.00 |
| 5 | கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் | நடைமேடைக்கு இரண்டு வீதம் 8 எண்ணிக்கையிலான RO Plant | 40.00 |
| 6 | ஏற்கனவே பழுதடைந்த இருக்கைகளை மாற்றியும், கூடுதல் இருக்கை வசதிகளை ஏற்படுத்தி தருதல் | 300 இருக்கைகள் | 15.00 |
| 7 | பழுதடைந்த மழைநீர் சேகரிக்கும் குழாயினை சீரமைத்தல். | - | 15.00 |
| 8 | 35 ஆண்டுகள் பழைமையான 4 நடைமேடைகளின் கூரையினை பராமரித்தல் | - | 20.00 |
| 9 | பயணிகளின் பொருட்கள் வைப்பறை புதிப்பித்தல் | - | 07.00 |
| 10 | புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடைகளினை சீரமைத்தல் | 56 எண்ணிக்கையிலான கடைகளின் தரைகளை சீரமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் | 56.00 |

| | | | |
|---|---|---|---|
| 11 | பேருந்து நிலைய நான்கு நடை மேடைகளுக்கும் வர்ணம் பூசுதல் | - | 40.00 |
| 12 | மழைநீர் வடிகால் சீரமைத்தல் | - | 45.00 |
| 13 | உயர் மின் கோபுர விளக்கு | **2** | **15.00** |
| 14 | தகவல் பலகை, தொலைக்காட்சி வசதி , **PAS** வசதி , **CCTV Camera** மற்றும் கட்டுப்பாட்டு அறை அமைத்தல் உள்ளிட்ட பணிகள் | - | 25.00 |
| | **மொத்தம்** | | **483.00** |

மேற்கண்ட இப்பணிகளை மேற்கொள்ளுவதன் மூலமாக சேலம் மத்திய பேருந்து நிலையத்தினை பயன்படுத்தும் பயணிகளின் சுகாதாரத்தினை மேம்படுத்தவும், பயணிகளுக்கான சேவை மற்றும் பராமரிப்பு பணிகளை எளிமையாக்கவும் முடியும்.

தமிழ் நாட்டின் முக்கிய மாநகரமாகவும் பல்வேறு சிறப்புகளையும், தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் மையப்புள்ளியாகவும் இருக்கும் சேலம் மாநகரத்தின் மத்திய பேருந்து நிலையத்தினை மேம்படுத்திட மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.